# 7. சமூக மாற்றத்துக்கான இசை - மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களது சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இசையியலாய்வு

கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன்

**திறவுச்சொற்கள்**
இசை, கீர்த்தனம், சமூகப்படிமம், சர்வ சமய சமரசம், பண்பாடு.

## ஆய்வு அறிமுகம்

தமிழ் இசை வரலாற்றிலே பல வாக்கேயகாரர்கள் தோன்றி இசை வளர்த்திருக்கின்றார்கள். காலந்தோறும் தோற்றம் பெற்ற வாக்கேயகாரர்கள், அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குரிய வடிகாலாக இசையினைத் தெரிந்திருப்பதை வரலாறுகள் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இந்நிலையிலே இவர்களது அனுபவ வெளிப்பாடுகளாக இவர்களது படைப்புக்கள் அமையப்பெற்றிருக்கக் காணுகின்றோம்.

பொதுவாகவே கலையின் தத்துவம் பற்றிப் பேசுகின்ற போது, கலைஞன் தான் வாழும் சமூகத்தைப் பிரதிபலிப்பவன் என்கின்ற ஒரு கருத்தும் கலைத் தத்துவவாதிகளால் முன்வைக்கப்படுகின்ற, ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு தத்துவமாகும். கலையானது சமூகத்தின் கண்ணாடி என்கின்ற கலைத்தத்துவம் இசைக்கலைக்கும் பொருந்தி, இசைக்கலை வரலாற்றின் ஒவ்வொரு கணத்திலும் கற்போர்க்கு நினைவுறுத்திக் கொண்டிருப்பதை வரலாற்றுப்பதிவுகள் வாயிலாகக் காணமுடிகின்றது

இந்த வகையிலே 19ம் நூற்றாண்டிலே தஞ்சையிலே பிறந்து தென்னிந்திய இசை வரலாற்றிற்குப் பங்காற்றியவர்களுள் முக்கியமானவராக மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் கருதப்படுகின்றார். இவரது படைப்புக்கள் தென்னிந்திய இசை வரலாற்றிற்கு ஒரு புதிய பரிமாணத்தையே கொடுத்தது என்றால் கூட மிகையில்லை.

இந்தவகையிலே கிபி 19ம் நூற்றாண்டிலே வாழ்ந்து சென்றிருக்கின்ற இசை வாக்கேயகாரர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களது படைப்புக்கள் பற்றியும், அவரது படைப்புக்கள் எத்துணைதூரம் தென்னிந்திய இசை வரலாற்றிற்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றது என்பது பற்றியும் இவ்வாய்வுக்கட்டுரை தெளிவு படுத்துவதாக அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

காலந்தோறும் இசை வளர்த்தவர்களுள் முக்கியமானக்கருதப்படக்கூடியவர்களுள் மாயூரம் வேதநாகம்பிள்ளை அவர்களும் ஒருவர். இவர் இயற்றிய கீர்த்தனைகள் பற்றியும், அக்கீர்த்தனைகளில் இடம்பெறக்கூடிய இசை அம்சங்கள் பற்றியும், இவரது படைப்புக்கள் தென்னிந்திய இசை வரலாற்றிலே பெறுகின்ற இடம் பற்றியும் எடுத்தாராய்வதாக இவ்வாய்வு அமையும்.



CamScanner

## ஆய்வின் பின்னணி

தமிழிசை மரபில் கீர்த்தனைக்கு உரிய இலக்கண அமைப்பினை வரையறை செய்தவர்களுள் முக்கியமாக முத்துத்தாண்டவர் (1525-1625) குறிப்பிடப்படுகின்றார். இவரைத் தொடர்ந்து அருணாசலக்கவிராயர்(1711 – 1779), மாரிமுத்தாப்பிள்ளை(1712-1787) ஆகியோர் கீர்த்தனை வடிவிலே பாடல்களை இயற்றினர். இவர்களைத் தொடர்ந்தவராக கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்களைக் குறிப்பிட முடியும். இவர்களது படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டே மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் தனது படைப்புக்களைப் படைத்திருக்கின்றார்.

வேதநாயகம்பிள்ளை அவர்கள் சங்கீத விற்பன்னர்கள் பெரும்பாலும் தெலுங்கிலேயே பாடல்களைப் பாடுகின்ற காலப்பின்னணியிலே வாழ்ந்தவர். ஆனாலும் அந்த இசையின் சமூக விச்சு அதிகளவிலே இருப்பதனை உணர்ந்த வேதநாயகம் அவர்கள் தமிழிலே மக்களுக்குப்புரியும் வகையிலே தமிழ்க்கீர்த்தனைகளை இயற்றி இசை மூலம் சமூகத்திற்கு நல்லது கூற விளைந்தார். சமூக மாற்றத்திற்கு இசையினைக் கருவியாகப்பயன்படுத்தினார்.
இந்த சமூக இசைப்பின்னணியிலேயே வேதநாயகம்பிள்ளை அவர்கள் தனது படைப்புக்களைப் படைத்திருக்கிறார். இவரது கீர்த்தனைகள் தமிழிசைமரபிலே ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கத்த வறவில்லை. இந்நிலையிலே இவரது படைப்புக்கள் பற்றியும் அவற்றின் இசைசார் சிறப்புக்கள் பற்றியும் ஆராய்ந்து தெரிந்து கொள்வது மிக அவசியமானதாகும்.

## ஆய்வு வடிவமும் முறையியலும்

மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களது கீர்த்தனைகளிலே இருக்கக்கூடிய இசை சார் மரபுகளையும் சிறப்புப்பண்புகளையும் இனங்கண்டு முன்வைப்பதாக அவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இதன் ஆய்வு மூலங்களாக வேதநாயகம் அவர்களால் எழுதப்பட்ட சர்வசமய சமரசக் கீர்த்தனைத் தொகுப்பு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

## ஆய்வின் முடிவும் பயனும்

மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் அவருக்கிருந்த இசை ஆர்வம் காரணமாக தனக்கு முன் வாழ்ந்து சென்ற இசை விற்பன்னர்களது படைப்புக்களால் மனம் கவரப்பட்டு தனது சமூகப்பணிக்கான ஆயுதமாக இந்த இசையினைக் கையாண்டிருக்கின்றார். அவரது முயற்சி எத்துணை தூரம் சமூக வீச்சினை ஏற்படுத்தியிருக்கின்றது, இந்த முயற்சி இசை மரபிலே எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது, இந்த முயற்சி பின்வந்த இசையாளர்களுக்கு எவ்விதத்திலே பாதை சமைத்துக் கொடுத்திருக்கின்றது என்பது பற்றியெல்லாம் இவ்வாய்வுக் கட்டுரை இனம் கண்டு எடுத்துக்கூற முயல்கின்றது.

துணைநூற்பட்டியல்:

1. வேநாயகம்பிள்ளை : சர்வ சமரசக்கீர்த்தனைகள் : முல்லை நிலையம் : 9,பாரதி நகர் முதல் தெரு, த. நகர், சென்னை 17. : 2003



CamScanner

2. வீ.ப.க.சுந்தரம் - தமிழிசைக் கலைக்களஞ்சியம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

3. புலவர் என். வி. கலைமணி – மாயூரம் வேதநாகம் பிள்ளை : சிவகாசி புக் பப்ளிகேஷன்ஸ், 160, பெரிய தெரு, திருவல்லழக்கேணி, சென்னை 5

4. முனைவர் சு. இராசாராம் - வீரசோழிய இலக்கணக்கோட்பாடுகள், இந்திய மொழிகள் பள்ளி, தமிழ் பல்கலைக்கழகம்.

5. டாக்டர் டு கே.கே. பிள்ளை –தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

6. டாக்டர்: கே. ஏ. பக்கிரிசாமிபாரதி: இந்திய இசைக்கருவூலம் : கசேலர் பதிப்பகம் : சென்னை, மதுரை: 2006



CamScanner